## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

### AA2 பரீட்சை – 2017 யூலை

## (AA26) வியாபார முகாமைத்துவமும் தந்திரோபாயமும்

---

இவ்வினாப்பத்திரம் 4 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. – மொத்தமாக 10 கட்டாய வினாக்களும் A, B, C, D என்னும் நான்கு பகுதிகளினுள் காணப்படுகின்றன.

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

இவ்வினா பாடத்திட்டத்தை முழுமையாக உள்ளடக்கும் வகையில் ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் என்ற வீதத்தில் மொத்தம் 20 புள்ளிகளுக்காக 10 உப வினாக்களைக் கொண்டிருந்தது.

இல. 1.1 தொடக்கம் 1.5 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அவ்விடைக்குரிய இலக்கத்தை மாத்திரம் விடைப்புத்தகத்தில் அதன் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு எழுதுமாறு தேவைப்படுத்தப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தலைப் பின்பற்றி விடையளித்திருந்தனராயினும் சில பரீட்சார்த்திகள் விடையின் இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக முழு விடையையும் எழுதியிருந்தமை பொதுவான குறைபாடாகக் காணப்பட்டது. வினா இல. 1.3 இல் வினவப்பட்ட அதிகாரத்தின் தன்மையின் அடிப்படையில் முகாமையாளர்களை வகைப்படுத்துவது தொடர்பான கேள்விக்குச் சரியான விடையை வழங்குவதற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

வினா இல. 1.6 தொடக்கம் 1.10 வரையில் தரப்பட்டிருந்த கூற்றுக்கள் ‘‘சரியானதா’’ அல்லது ‘‘தவறானதா’’ என விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கோரப்பட்டிருந்தது. இங்கும்கூட சில பரீட்சார்த்திகள் அறிவுறுத்தலைப் பின்பற்றியதைக் காணக்கிடைக்கவில்லை. அவர்கள் சரியானது என்பதற்கு “√” என்னும் குறியீட்டையும் தவறானது என்பதற்கு “X” குறியீட்டையும் இட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் வினா இல. 1.8 இல் வினவப்பட்ட போட்டரின் ஐந்து படை மாதிரி பற்றிய வினாவுக்கும் அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைச் சரியாகப் புரிந்துகொள்ளாமையே இத்தகைய நிகழ்வுகள் நடைபெறக் காரணமாக இருந்திருக்கும்.

மொத்தத்தில் பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அதிகளவானவற்றைப் பெற்றிருந்ததுடன் அவர்களின் செயலாற்றுகை மட்டமும் மிகவும் திருப்திகரமானதாக இருந்தது.

### பகுதி B

இப்பகுதி மொத்தமாக 25 புள்ளிகளுக்காக 05 வினாக்களை (ஒவ்வொரு வினாவுக்கும் 5 புள்ளிகள் வீதம்) கொண்டுள்ளது.

**வினா இல. 02**

இவ்வினா அதிகாரவியல் பற்றியதாக இருந்ததுடன் அதிகாரவியல் என்பது பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது. ‘‘அதிகாரவியல் என்பது சட்டம் மற்றும் எழுதப்பட்ட விதிகளால் அளிக்கப்பெற்ற அதிகாரத்தின் ஊடாக நபர் ஒருவரின் மீது அதிகாரத்தை செலுத்துகின்ற ஒரு உயரிய வழி ஆகும். இங்கு அதிகாரவியலின் அனுகூலங்கள் (03) மற்றும் பிரதிகூலங்கள் (02) பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. இது புள்ளிகளைப் பெறக்கூடிய

இலகுவான வினாவாக இருந்தபோதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதைச் சரியாக விளங்கிக்கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் மாத்திரம் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இவ்வகை வினாக்களுக்கு தெளிவான மற்றும் குறிப்பான விடைகளை வழங்குவது பரீட்சார்த்தி களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அவர்கள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். சில பரீட்சார்த்திகள் அதிகாரத்துவத்தின் பிரதிகூலங்களை எழுதும்போது தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இருப்பினும், ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

**வினா இல. 03**

இன்றைய சூழலில் முகாமையாளர்கள் எதிர்நோக்கும் 05 சவால்களைக் கூறுவதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டது. இது ஒரு நடைமுறை வகையிலான வினாவாகும். இங்கு பரீட்சார்த்திகள் இது தொடர்பில் சிந்தித்து விடையளிப்பதற்கான வாய்ப்பு ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இருப்பினும், சில பரீட்சார்த்திகள் பாடப்பரப்பு தொடர்பான அறிவு காணப்படாமை மற்றும் வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பது பற்றிய விளக்கத்தைக் கொண்டிராமை ஆகிய காரணங்களால் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**வினா இல. 04**

தொடர்பாடல் தடைகளை வெற்றிகொள்வதற்காகப் பரிந்துரைக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் (05) தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவை பரீட்சிப்பதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்ததால் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அவர்கள் காலத் தொடர்பாடல், அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் பற்றிக் கலந்துரையாடியமை, தொடர்பாடல் நிலைகள், விளைவுத்திறன்மிக்க தொடர்பாடல் செயன்முறை ஒன்றினுள் அனுப்புநர் மற்றும் பெறுநர் ஆகியோரால் கருத்திலெடுக்கப்பட வேண்டிய காரணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் விளக்கியிருந்தனர்.

எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**வினா இல. 05**

வரையறுக்கப்பட்ட ABC கம்பனி தங்களுடைய கணக்கீட்டு ஊடுசெயல்கள் தொடர்பான பதிவுகளைப் பேணுவதற்குக் கைமுறையான கணக்கீட்டு முறைமை ஒன்றினைப் பயன்படுத்துகிறது. வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின் முகாமை அடுத்த மாதத்திலிருந்து கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றைப் பயன்படுத்தத் தீர்மானித்திருக்கிறது என விவரிக்கப்பட்ட விவரணம் ஒன்று இங்கு தரப்பட்டிருந்தது. இம்மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்காக வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின் ஊழியர்களை உற்சாகப்படுத்தக்கூடிய 03 வழிமுறைகளை எழுதுவதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டது.

பரீட்சார்த்திகள் இவ்வினாவைச் சரியாக அடையாளம் கண்டு உற்சாகப்படுத்தும் 03 வழிவகைகளை விபரித்து வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறக்கூடிய நிலை காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையை நோக்கி நகர்வதன் அனுகூலங்கள் பற்றி ஆராய்தல் போன்ற சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகளோ ABC கம்பனியின் முகாமையால் எடுக்கப்பட்ட

தீர்மானத்தை பகுப்பாய்வு செய்திருந்தனர்; இது சம்பந்தமற்றது என்பதுடன் ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும்.

பரீட்சார்த்திகள் தரப்படும் விவரணத்தை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்வது இங்கு எதிர்பார்க்கப் படுகிறது என்பதை அவர்கள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். எனவே, பரீட்சார்த்திகள் நடைமுறைச் சந்தர்ப்பம் ஒன்றினுள் கோட்பாடுகளைப் பிரயோகிப்பதன் மூலம் தெளிவானதும் கவனக்குவிப்பு மிக்கதுமான விடைகளை வழங்குவது அவசியமானதாகும்.

இருப்பினும், விடையளித்தலின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மட்டம் நன்று.

**வினா இல. 06**

நிறுவன ஆளுகையின் முக்கியத்துவம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க இங்கு எதிர்பார்க்கப்பட்டது. விடையானது சுருக்கமான முறையில் எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சிக்கக்கூட இல்லை.

மேலும், சில பரீட்சார்த்திகள் நிறுவன ஆளுகைக்குப் பதிலாக ‘‘சங்க அமைப்பு விதிகளைப்’’ பற்றி ஆராய்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இன்னம் சில பரீட்சார்த்திகள் நிறுவன ஆளுகைக் கோட்பாடுகள் பற்றி ஆராய்ந்திருந்த சில சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாக இருந்தது. மேலும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் தங்கள் விடையின் முழுமைக்கும் நிறுவன ஆளுகை பொது மக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றியே ஆராய்ந்திருந்தனர். இருப்பினும், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 07**

இவ்வினா முகாமையின் முக்கியமான தொழிற்பாடுகளில் ஒன்றான திட்டமிடல் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இது அறிவு, விளங்கிக்கொள்ளல் மற்றும் பிரயோகம் ஆகியவற்றை உள்ளடக்கிய 2 பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி **(a)** ஆனது, முகாமைத்துவ மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடலின் 03 வகைகளை விபரிக்குமாறு கேட்டிருந்த அதேநேரம் பகுதி **(b)** தீர்மானமெடுத்தல் நிறுவனம் ஒன்றுக்கு ஏன் முக்கியமானது என்பதற்கான 02 காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

இங்கு முறையே முகாமையுடன் தொடர்புடைய மட்டங்களை அடையாளம் காண்பதற்கும் திட்டமிடலின் வகைகளை (தந்திரோபாயத் திட்டமிடல், உத்திசார் திட்டமிடல் மற்றும் தொழிற்பாட்டுத் திட்டமிடல்) விபரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் திட்டமிடல் வகைகளுக்குப் பதிலாக முகாமை மட்டங்களைக் குறிப்பிட்டிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் முகாமையுடன் தொடர்புடைய மட்டங்களை அடையாளம் காணத் தவறியிருந்ததுடன் திட்டமிடலின் வகைகளை விபரிக்கவும் தவறியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் முகாமைத் திறன்களைப் பற்றி விபரித்திருந்தனர். அத்துடன், சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்ததன் காரணமாக புள்ளிகள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

வினாவின் பகுதி (b) இற்கு விடையளிக்கும்போது, தீர்மானம் எடுப்பது நிறுவனமொன்றுக்கு ஏன் முக்கியமானது என்பதற்கான காரணத்தைப் பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனராயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் அக்காரணங்களை விபரித்திருக்கவில்லை. எனவே, அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெறமுடியவில்லை.

இருப்பினும், ஒட்டுமொத்த விடையளித்த மட்டம் மிகவும் உயர்வாக இருந்தது.

## வினா இல. 08

இந்த வினா நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அதன் தொழிற்பாடுகள் பற்றிய அறிவைப் பரீட்சிக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டிருந்தது. இது விளங்கிக்கொள்ளல் மற்றும் பிரயோகம் தொடர்பான அறிவை உள்ளடக்கியதான 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. பகுதி **(a)** ஆனது, ஒழுங்கமைத்தல் செயன்முறையுடன் தொடர்புடைய படிநிலைகளை விபரிக்குமாறு தேவைப்படுத்தியிருந்ததுடன் பகுதி **(b)** ஆனது தொழிற்பாடுசார் நிறுவனக் கட்டமைப்பு ஒன்றின் 2 அனுகூலங்களையும் 2 பிரதிகூலங்களையும் குறிப்பிடுமாறு தேவைப்படுத்தியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் தேவைப்படுத்தப்பட்ட விடயங்களைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே, அவர்கள் இவ்வினாவுக்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தமையையும் குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் பூரணமற்ற விடைகளை வழங்கியிருந்தமையையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒழுங்கமைப்புச் செயன்முறையானது ‘‘வேலையை அடையாளம் காணலும் வேலைப் பிரிப்பும், வேலைகளை குழுக்களாக்கலும் பன்முகப்படுத்தலும், வேலையை ஒதுக்கீடு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்’’ ஆகிய படிமுறைகளை உள்ளடக்கியுள்ளது.

பகுதி **(b)** இல், தொழிற்பாடுசார் நிறுவனக் கட்டமைப்பு ஒன்றின் 02 அனுகூலங்களையும் 02 பிரதிகூலங்களையும் எழுதுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் தொழிற்பாடுசார் நிறுவனக் கட்டமைப்பொன்றின் பிரதிகூலங்களை எழுதுவதற்குப் பதிலாக தொழிற்பாடுசார் நிறுவனக் கட்டமைப்பு ஒன்றின் அனுகூலங்களையும், அனுகூலங்களுக்குப் பதிலாக பிரதிகூலங்களையும் மாற்றி மாற்றி எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொழிற்பாடுசார் நிறுவனக் கட்டமைப்புக்குப் பதிலாக பகுதிகளாக்கப்பட்ட மற்றும் தாய அடிப்படையிலான நிறுவனக் கட்டமைப்புகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அடையாளம் கண்டிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (a) இனை விடவும் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

## வினா இல. 09

இவ்வினா நிறுவன கலாசாரம் மற்றும் நிறுவனங்கள் மீது அதன் தாக்கங்கள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்த்திருந்தது.

பகுதி **(a)** இல், கலாசார வலையின் கூறுகளான குறியீடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளை விபரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் கலாசார வலையின் கூறுகள் தொடர்பில் குறைந்தளவான அறிவையே கொண்டிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

பகுதி **(b)** இல், தந்திரோபாய அமுல்படுத்தலில் நிறுவன கலாசாரத்தின் தாக்கத்தை விபரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பரீட்சார்த்திகள் தந்திரோபாய அமுல்படுத்தலில் நிறுவன கலாசாரத்தின் தாக்கத்தை விபரிப்பது தொடர்பில் குறைந்தளவு அறிவைக் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இது பிரதானமாக நிறுவன கலாசாரம் தொடர்பில் போதியளவு விளக்கமின்மையால் ஏற்பட்டிருந்தது. எனவே, பெரும்பாலான பரீட்சார்த்திகள், இவ்வினாவுக்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் நிறுவன கலாசாரம் தொடர்பில் போதியளவு விளக்கமின்மையால் மிகவும் தெளிவற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

## பகுதி D

**வினா இல. 10**

இவ்வினா தரப்பட்ட விவரணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளிப்பதற்கான ஒரு கட்டாய வினாவாகும். இதற்கு 25 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. கடந்த வருடங்களில் கேட்கப்பட்ட வினாக்களுடன் ஒப்பிடுகையில் இவ்வினாவுக்குப் பரீட்சார்த்திகள் உயர்ந்தளவுப் புள்ளிகளைப் பெற்றிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில், **"சீசன்ஸ் எயார்லைன்ஸ்"** என்பது **HH** என்னும் நாட்டின் தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனம் என்பதுடன் அது இத்தொழிற்றுறையின் தனியுரிமை அதிகாரத்துடன் அதன் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்திருக்கிறது. எவ்வாறாயினும், கடந்த இரண்டு வருடங்களாக கம்பனியின் செயற்பாடு வீழ்ச்சியடைய ஆரம்பித்திருக்கிறது. இந்தக் கட்டமைப்பு வகை வினாவின் ஊடாக நடப்பு நிலைமைகளில் முகாமைக் கோட்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. அதற்கிணங்க, இவ்வினாவில் தரப்பட்ட பிரச்சினையைச் சரியாக வாசித்து விளங்கிக்கொண்டு நடைமுறை ரீதியில் கோட்பாட்டு அறிவினை பிரயோகிப்பது அவசியமானதாகும்.

பகுதி **(a)** இல், **சீசன்ஸ் எயார்லைன்ஸ்** இன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு ஊழியர்களின் ஊக்கமின்மையை வெளிக்காட்டும் அறிகுறிகள் மூன்றினை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் இதற்கான முழுப் புள்ளிகளையும் வெற்றி கரமாகப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் ஊக்கமின்மையை வெளிக்காட்டும் அறிகுறிகளை அடையாளம் காண்பதில் இடர்ப்பாட்டினைக் கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஊக்கமின்மையை வெளிக்காட்டும் அறிகுறிகளை விபரிப்பதற்குப் பதிலாக, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு ஊழியர்களை ஊக்கப்படுத்தும் முறைகளை எழுதியிருந்த சந்தர்ப்பங் களையும் காணக்கூடியதாக இருந்தது. எனவே, தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பகுதி **(b)** இல், **சீசன்ஸ் எயார்லைன்ஸ்** இன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு ஊழியர்களுக்கான பயனுறுதிமிக்க ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றை வடிவமைப்பதில் காணப்படும் படிநிலைகளை அடையாளம் காணுமாறு கோரப்பட்டிருந்தது. வினாவின் இப்பகுதிக்கு விடையெழுதுவதற்குப் பரீட்சார்த்திகள் முயன்றிருந்த போதிலும் ஐம்பது வீதத்திற்கும் குறைவான வர்களே திருப்திகரமான முறையில் விடையெழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஊழியர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு செய்யவேண்டியவை பற்றிய அட்டவணை ஒன்றை முன்னிலைப்படுத்தி யிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் விடைகளை வழங்கும் பொருட்டு ERG மற்றும் தேவைப் படிநிலைகள் போன்ற கோட்பாடுகளைப் பயன்படுத்தியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் விடைகளைச் சூழ்நிலையுடன் தொடர்புபடுத்தியிருக்கவில்லை. இவற்றுக்கு மேலதிகமாக, சில பரீட்சார்த்திகள் பகுத்தறிவான தீர்மானமெடுத்தலுடன் தொடர்புடைய படிநிலைகள் போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பகுதி **(c)** இல், பொருத்தமான தலைமைத்துவ மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு திரு. நதீசன் மற்றும் திரு சில்வா ஆகியோரின் தலைமைத்துவப் பாங்கினை ஆராயுமாறு கோரப்பட்டிருந்தது. இது புள்ளிகளைப் பெறக்கூடிய மிகவும் இலகுவான வினாக்களில் ஒன்றாகக் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் தலைமைத்துவப் பாங்கினைச் சரியாக இனங்கண்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட தலைமைத்துவப் பாங்கினை அடையாளம் கண்டிருந்த போதிலும், தரப்பட்ட விவரணத்திலிருந்து சம்பந்தப்பட்ட விடயங்களுடன் விடைகளை நியாயப்படுத்தியிருக்கவில்லை. எனவே, அவர்கள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். விவரணத்தைச் சரியானவாறு வாசித்திருப்பார்களாயின் அத்தகைய பரீட்சார்த்திகள் இலகுவாக உயர் புள்ளிகளைப் பெற்றிருக்க முடியும்.

பகுதி **(d)** இல், ஒரு நல்ல தந்திரோபாயத்தின் பண்பியல்புகள் நான்கினை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் இதற்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் சம்பந்தமில்லாத விடைகளையே எழுதியிருந்தனர். எனவே, இவ்வினாவுக்கான புள்ளிகளை அவர்கள் பெறவில்லை. பரீட்சார்த்திகள் விடைகளை சூழ்நிலையுடன் தொடர்புபடுத்தியிருக்காவிட்டாலும்கூட அவர்களது கோட்பாட்டு அறிவின் அடிப்படையில் நல்ல தந்திரோபாயம் ஒன்றின் பண்பியல்புகளை குறிப்பிட்டிருந்திருப்பின் சில புள்ளிகளையாவது பெற்றிருக்க முடியும்.

- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கருத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:

1. பாடத்திட்டத்தை நன்றாகக் கற்கவும்.

2. வினாப்பத்திரத்தைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.)

3. பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் கவனமாக வாசித்து, அதில் என்ன வினவப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடை எதிர்பார்க்கப்படும் வேளையில், தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுது வதைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

4. பரீட்சை நேரத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

5. விடைப் புத்தகத்தினை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்கள், உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

6. ‘‘செயல் வினைச்சொல் பட்டியல்’’ ஒன்று வினாப்பத்திரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடைகள் எழுதப்படல் வேண்டும்.

7. கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

8. சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பது விரும்பத்தக்கது.

9. உங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்வதன் பொருட்டு கடந்தகால வினாப்பத்திரங் களுக்கு விடையளித்துப் பழகிக்கொள்ளுங்கள்.

10. நல்ல முன்னாயத்தத்துடனும் சித்தியடைகின்ற உறுதியானதொரு உறுதிப்பாட்டுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -